

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | நவம்பர் 23, 2017 | புரட்சி 16 | முழக்கம் 45 | விலை: ரூ.3.00

# தமிழக வேலை வாய்ப்புகளை வடநாட்டுக்கு ‘தாரை வார்க்க’ சதி!

## தமிழ்நாடு தேர்வாணையத்தின் அதிர்ச்சி அறிவிப்பு

தமிழ்நாட்டில் மாநில அரசுப் பணிகளுக்கு 9,351 பேர் தேர்வு செய்ய தமிழ்நாடு அரசுப் பணித் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) 2018 பிப்ரவரியில் தேர்வு நடத்த அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அந்த அறிவிப்பில், 07.11.2016 அன்று திருத்தப்பட்ட தேர்வாணைய விதிமுறைகளின்படி மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

2016இல் செய்த திருத்தம், தமிழ்நாடு அரசுப் பணிகளுக்கு இந்தியா முழுவதும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்; நேப்பாளம், பூட்டான் ஆகிய வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று கூறுகிறது. அதுமட்டுமின்றி, பாகிஸ்தான், திபெத் போன்ற நாடுகளிலிருந்து வந்த அகதிகளும் விண்ணப்பிக்கலாம் என்றும் கூறுகிறது.

இவ்வாறு வருபவர்களுக்கு இப்பொழுது தமிழ் தெரியாவிட்டாலும் பரவாயில்லை, இரண்டாண்டுகளுக்குள் அவர்கள் தமிழ் கற்றுக் கொண்டால் போதும் என சலுகை வழங்குகிறது, தமிழ்நாடு அரசு!

நேரடியாக 31 விழுக்காட்டுப் பொதுப்பட்டியலில் உள்ள பணியிடங்களை பிற மாநிலங்கள் மற்றும் பிறநாடுகளைச் சேர்ந்தவர்கள் பறித்துக் கொள்ள வாய்ப்பளிக்கிறது தமிழ்நாடு அரசின் இந்த அறிவிப்பு! அதுமட்டுமின்றி, இட ஒதுக்கீட்டுப் பட்டியலிலும் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பறித்துக் கொள்ள வாய்ப்பளித்துள்ளது.

தேர்வானோர் தமிழ்நாட்டின் இடஒதுக்கீட்டு அடிப்படையில் வேலைக்கு சேர்க்கப்படுவர் என்று அவ்விளம்பரம் கூறுகிறது. ஏற்கெனவே அந்தந்த மாநிலங்களில் இட ஒதுக்கீட்டைப் பெற்று வரும் ஜாதியினருக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கான 69 விழுக்காடு இடஒதுக்கீட்டிற்குரிய இடங்களையும் அபகரிக்க வாய்ப்பளிக்கிறது தமிழ்நாடு அரசு!

1956ஆம் ஆண்டு மொழிவழி மாநிலங்கள் உருவாக்கப்பட்ட பிறகு, அந்தந்த மாநிலங்களில் வரலாற்று வழியில் நீண்டகாலமாக வாழ்ந்து வந்த ஜாதியினருக்கு மட்டுமே இட ஒதுக்கீட்டுப் பட்டியிலில் இடம் அளிக்கப்படுகிறது. ஆந்திரா, கர்நாடகா, கேரளா, மராட்டியம் உள்ளிட்ட பல மாநிலங்களில் தமிழர்கள் பரம்பரையாகவும், இருபது முப்பது ஆண்டுகளுக்கு மேலாகவும், இன்றைக்கும் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தாலும்கூட, அவர்களது ஜாதி, இட ஒதுக்கீட்டுப் பட்டியிலில் ஏற்கப்படாமல், தமிழர்கள் அனைவரும் “பொதுப் பட்டிய”லிலேயே வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில்தான், தமிழ்நாடு முழுவதுமுள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் விரிவுரையாளர் பணிக்கான 1058 இடங்களில், கணிசமான வெளி மாநிலத்தவர்கள், குறிப்பாகப் பொதுப் பட்டியலில் 68 விழுக்காட்டினர் தேர்வு செய்யப்பட்டுள்ள செய்தி வெளிவந்தது. தமிழ் மக்களுக்குரிய இடங்களை ஆக்கிரமிக்கும் இந்த வெளி மாநிலத்தவருக்கு வேலை தரக் கூடாது என்பதை வலியுறுத்தி பல போராட்டங்கள் நடந்துவருகின்றன.

அடுத்து, அதைவிடவும் பேரிடியாக இப்பொழுது வெளி மாநிலங்கள் – வெளி நாடுகளிலிருந்து தமிழ்நாட்டு அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிக்க தமிழ்நாடு அரசு இப்போது விளம்பரம் கொடுத்துள்ளது.

இது குறித்து தேர்வாணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

*ஒரு விண்ணப்பதாரர் கீழ்காணும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.*

*(அ) விண்ணப்பதாரரின் குடியுரிமை:-*

*i) இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும் அல்லது*

*ii) நேபாளம் அல்லது பூட்டான் அரசின் குடிமகனாக இருத்தல் வேண்டும். அல்லது*

*iii) இந்தியாவில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்கத்துடன் 1962 ஜனவரி 1ஆம் நாளுக்கு முன்பு திபெத்திலிருந்து இந்தியாவிற்கு வந்துவிட்ட அகதியாக இருத்தல் வேண்டும். அல்லது*

*iv) இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டு பாகிஸ்தான், பர்மா, ஸ்ரீலங்கா, வியட்நாம், கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளான கென்யா, உகாண்டா, தான்சானியா ஐக்கியக் குடியரசு (முன்னாள் தங்கனிகா மற்றும் சான்சிபார்), ஜாம்பியா, மாலவி, சயர், எதியோப்பியா ஆகிய நாடுகள் ஏதாவதொன்றிலிருந்து இந்தியாவில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்குடன் இடம் பெயர்ந்து வந்தவராக இருத்தல் வேண்டும்.*

*v) மேற்கூறிய மூன்றாம் அல்லது நான்காம் வகையைச் சேர்ந்த விண்ணப்பதாரர் அல்லது நேபாளத்தின் அல்லது பூட்டான் அரசின் குடிமகன் ஒருவர் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழைப் பெற வேண்டும்.*

**குறிப்பு:**

*1) போதுமான தமிழறிவு இல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். அவர்கள் தேர்வு பெற்றுப் பணியில் நியமிக்கப்பட்டால், பணியில் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குள் தமிழில் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத் தேர்வு) தேர்ச்சிப் பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறத் தவறுபவர்கள் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள்.*

*2) சில பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட தமிழ்மொழிக் கல்வித் தகுதி பெற்றிருப்பது கட்டாயமாகும். அவ்வாறு அறிவிக்கப்பட்ட பதவிகளுக்கு மேற்குறிப்பிட்ட விதி பொருந்தாது.*

– என்று தேர்வாணையத்தின் அறிவிப்பு கூறுகிறது.

## பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களுக்கு தண்டனைக் குறைப்பு வழங்க உதவுங்கள் : சோனியாவுக்கு நீதிபதி கே.டி.தாமஸ் உருக்கமான கடிதம்

*ராஜிவ் காந்தி கொலை வழக்கு விசாரணையில் குற்றம்சாட்டப்பட்ட மூவருக்கு தூக்குத் தண்டனை விதித்து உச்சநீதிமன்ற அமர்வுக்கு தலைமை தாங்கிய நீதிபதி கே.டி.தாமஸ், காங்கிரஸ் தலைவரும் ராஜிவ் காந்தி மனைவியுமான சோனியாவுக்கு அக்டோபர் 18ஆம் தேதி ஒரு கடிதம் எழுதியுள்ளார். 1991ஆம் ஆண்டு முதல் இந்த வழக்கில் சிறைப் படுத்தப்பட்டுள்ளோரின் தண்டனை குறைப்புக்கு பரந்த உள்ளத்தோடு, சோனியா தனது சம்மத்தை தெரிவிக்க முன்வர வேண்டும் என்று அந்த கடிதத்தில் கேட்டுள்ளார். அவரது கடிதத்தின் விவரம்:*

“2014ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, ராஜிவ் கொலையில் தண்டிக்கப்பட்டு சிறையிலிருக்கும் 7 பேருக்கும் தண்டனைக் குறைப்பு வழங்க தமிழ்நாடு அரசு முன் வந்தபோது மத்திய அரசு எதிர்த்தது. அந்த வழக்கு இப்போது உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் நீங்களும் ராகுல் காந்தியும், வாய்ப்பிருந்தால் பிரியங்காவும் குடியரசுத் தலைவருக்கு தண்டனைக் குறைப்பு வழங்கலாம் என்று உங்கள் சம்மதத்தை தெரிவித்து ஒரு கடிதம் எழுதுவீர்களேயானால், மத்திய அரசு, தண்டனைக் குறைப்புக்கு முன் வரக் கூடும். இவர்கள் தங்கள் வாழ்க்கையின் நீண்ட காலத்தை சிறையிலேயே கழித்து விட்டார்கள்.

நிச்சயமாக இது உங்களின் மனிதாபிமான செயலாக இருக்கும் என்று எனக்கு தோன்றுகிறது. இந்தக் கைதிகளின் தண்டனைக் குறைப்புக்கு உங்களால் மட்டுமே உதவிட முடியும். இந்த மூன்று பேருக்கும் தண்டனை விதித்த நீதிபதி என்ற முறையில், இந்த சூழலில், நான் இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதுவதன் வழியாக நீங்கள் உங்கள் மனிதநேயத்தை வெளிப்படுத்த முடியும் என்று உணருகிறேன்” என்று அந்தக் கடிதத்தில் கே.டி. தாமஸ் குறிப்பிட்டுள்ளார்.

சோனியாவுக்கு கடிதம் எழுதியதை புதுடில்லி ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ செய்தியாளரிடம் உறுதிப் படுத்திய முன்னாள் நீதிபதி தண்டிக்கப்பட்டவர் களுக்கு கருணை காட்ட வேண்டும் என்பதே தனது நோக்கம் என்றார். சி.பி.அய். நடத்திய விசாரணை யில் கடுமையான ‘ஓட்டைகள்’ இருப்பதையும் சுட்டிக் காட்டினார்.

மகாத்மா காந்தி கொலை வழக்கில் சதித் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கோபால் கோட்சே 14 ஆண்டுகளில் தண்டனைக் குறைப்பு செய்து விடுதலை செய்யப்பட்டதை நீதிபதி கே.டி. தாமஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

சோனியாவுக்கு எழுதிய கடிதத்தில் இறுதியாக -

“இந்தக் கைதிகளுக்கு மனிதநேயம் காட்டினால் எல்லாம் வல்ல இறைவன் மகிழ்ச்சியடைவார் என்றே நான் நம்புகிறேன். இந்தத் தாழ்மையான வேண்டுகோளை தங்களிடம் சமர்ப்பித்திருப்பது தவறாக இருக்குமானால், இறைவன் என்னை மன்னிக்கட்டும்” - என்ற உருக்கமான வரிகளுடன் கடிதத்தை முடித்துள்ளார் நீதிபதி கே.டி.தாமஸ்.

“செல்வாக்கு மிக்க தலைவரின் கொலை

(4ஆம் பக்கம்)

# தமிழர் தேசிய அடையாளத்தை முற்றாக ஒழிக்கும் இலங்கையில் புதிய அரசியல் சட்டம்

எந்த ஒரு சட்டமும் நியாய மதிப்பீட்டிற்கு (Test to Fairness) உட்பட்டதாகவே இருக்க வேண்டும் என்பது உலக வரைமுறை. அதாவது நியாய மதிப்பீடுகள் காலப் போக்கில் மாற்றம் பெறலாம். அதற்கேற்ப சட்டத்தில் மாற்றம் செய்யும் நெகிழ்வுத் தன்மையைக் கொண்டதாக சட்டம் இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, அமெரிக்காவில் ஆப்ரிக்க இன மக்களை அடிமைகளாக வைத்துக் கொள்வதை சட்டம் அனுமதித்தது. அங்கீகரித்தது. அடிமைத்தனம் சட்டப் பூர்வமானதாக இருந்தது. ஆனால் காலப் போக்கில் மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட்டது. அடிமைத் தனம் அநாகரிகமானது என்பதை மக்கள் உணர்ந் தனர். அது மனித உரிமைகளுக்கு எதிரானது என்பதை புரிந்துக் கொண்டனர். அதற்கேற்ப அமெரிக்க சட்டத்தி லும் மாற்றம் கொண்டு வரப்பட்டது. அடிமைத் தனத்தை சட்ட விரோதமாகவும் சமத்துவத்தை வலியுறுத்தியும் பல சட்ட மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. இதுதான் நியாய மதிப்பீடு என்று வழங்கப்படுகிறது.

ஆக இந்த நெகிழ்வுத்தன்மை எந்தவொரு சட்டத்திலேனும் மறுக்கப்படுமானால் அது உலக சட்ட வரையறைகளுக்கே விரோதமானதாகும்.

இந்த அடிப்படையில் நோக்கினால் இலங்கையில் அரசியல் யாப்பிற்கு முன்மொழியப்பட்டுள்ள மாற்றங்கள் அடிப்படையிலேயே உலக சட்ட வரையறைகளுக்கு முரணானதாக உள்ளன.

எந்தவொரு அரசியல் யாப்பிற்கும் கொடுக்கப்படும் முன்னுரை (Preamble) அந்த அரசியல் யாப்பின் நோக்கத்தை விளக்குவதாகவும், அந்த நாட்டின் அடிப்படைக் கொள்கைகளை முன்னிறுத்துவதாகவும் இருக்கும். எடுத்துக்காட்டாக இந்தியாவின் அரசியல் யாப்பின் முன்னுரை இந்தியாவை ஒரு சமய சார்பற்ற நாடாகவும், இந்திய மக்களுக்கு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதியையும், எண்ணம், கருத்து, பக்தி, நம்பிக்கை மற்றும் வழிபாடு ஆகியவற்றில் கருத்துரிமையையும், சமத்துவமான நிலையையும் வாய்ப்புகளையும் தனி நபர் மாண்பையும் உறுதி செய்வதாகவும் சொல்கிறது.

ஆனால் இலங்கையின் அரசியல் யாப்பின் இந்த முன் மொழிவு மீண்டும் மீண்டும் ஒரே ஒரு கருத்தையே பல விதங்களில் வலியுறுத்துகிறது. அதாவது இலங்கை ஓர் "ஒருமித்த தேசம்" என்பதுதான் அது.

அதிலும் குறிப்பாக ஆங்கில சொல்லான Unitary என்பதன் பொருள் இன்று மாறி வடக்கு அயர்லாந்தும் ஸ்காட்லாந்தும் பிரிட்டனிடமிருந்து பிரிந்து போனதைச் சுட்டிக் காட்டி அதனால் Unitary என்ற சொல் இலங்கைக்குப் பொருந்தாது என்று தெளிவாகக் கூறியுள்ளனர். அதோடு அதற்கு மாற்றாக சிங்களத்தில் 'அய்க்கிய ராஜ்ய' என்ற சொற்றொடரை முன் மொழிந்து அதன் தமிழ் மொழிப்பெயர்ப்பாக 'ஒருமித்த தேசம்' என்ற சொற்றொடரையும் வழங்கியுள்ளனர். இந்த 'ஒருமித்த தேசம்' என்றச் சொற்றொடர் பல இடங்களில் வலியுறுத்தப் பட்டுள்ளது. உலகளவில் பயன்படுத்தப்படும் சொல்லான Unitary என்பதை நீக்கிவிட்டு அதன் இடத்தில் சிங்கள சொல்லை வைப்பது என்பதே உலக அளவிலான விளக்கங்கள் இதற்கு பொருந்தாது என்பதையும் அவற்றைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் புதிய விளக்கங்கள் கொடுக்க இயலாது என்பதையும் தெளிவாக வலியுறுத்துவதாக உள்ளது. ஆக இலங்கை எக்காலத்திலும் ஒரே நாடாகதான் இருக்க வேண்டும் என்பதை அரசியல் சட்ட ரீதியாக வரையறுக் கின்றனர்.

அதிலும் அரசியல் யாப்பின் முன்னுரையிலேயே இலங்கையை 'ஒருமித்த தேசம்' என்று திட்டவட்டமாக வலியுறுத்துவதும், அதற்கு மாறாக பிரிவினை குறித்த எந்த ஒரு கருத்தையும் செயலையும் சட்ட விரோதமாக்குவதும் மிகவும் விநோதமானதாகும்.

பிரிவினைக்கு எதிரான சட்டங்கள் பல நாடுகளிலும் இருக்கதான் செய்கின்றன. ஆனால் அரசியல் யாப்பின் முன்னுரையிலேயே வலியுறுத்து வது என்பது புதுமையானது. இப்படி அதனை மீண்டும் மீண்டும் முன்னுரையில் பலவிதமாக வலியுறுத்துவது என்பது இந்த அரசியல் யாப்பு மாற்றத்திற்கான நோக்கத்தை வெட்ட வெளிச்சமாக்குகிறது.

மேலும் இது உலக சட்ட வரையறைகளுக்கு விரோதமாகவும் உள்ளது. ஏனெனில் சட்டம் நியாய மதிப்பீட்டின் மாற்றத்துடன் இணைந்தது. ஆனால் அரசியல் யாப்பின் முன்னுரை திட்டவட்டமானது. அதில் ஒரு கருத்து வலியுறுத்தப்படுமானால் நாட்டின் அனைத்துச் சட்டங்களுக்கும் அதுவே அடிப்படை என்று வரையறுப்பதாகும். அப்படியாயின் அது நியாய மதிப்பீட்டிற்கு உட்படாததாகும். அந்த அடிப்படையில் அது உலக சட்ட வரையறைகளுக்கு விரோதமானதாக உள்ளது.

இரண்டாவதாக இலங்கையை ஒரு பவுத்த நாடாக மீண்டும் இந்த முன் மொழிவு உறுதி பட வரையறுக்கிறது. ஒரு நாடு மதம் சார்ந்ததாக தன்னை வரையறுக்குமானால் அந்த நாட்டின் மக்கள் அனைவரும் அந்த மதத்தின் விதிகளுக்குக் கட்டுப் பட்டவர்கள் என்பது பொருள். அரேபிய நாடுகளில் ரமலான் மாதத்தில் பகலில் உணவகங்கள் மூடப் பட்டிருப்பது இந்த அடிப்படையில்தான். பிற மதத்தைச் சேர்ந்தவர்களும் அரசு மதத்தின் சட்டங்களை பின்பற்ற வேண்டியதும் சட்ட விதிகளை கடைப்பிடித்து காப்பாற்ற வேண்டியதும் கடமையாகும்.

மேலும் அரசு மதத்தைச் சேர்ந்தவரே அந்த நாட்டின் தலைவராக வர இயலும் என்பது எழுதப்படாத சட்ட விதியாகும். இவை இரண்டுமே அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு விரோதமானவை. நல்லிணக்கத்தை வலியுறுத்துவதற்காக இச்சட்ட மாற்றம் முன்மொழியப் படவில்லை என்பதற்கான மற்றொரு சான்று இது. நல்லிணக்கமே நோக்கமாக இருந்திருப்பின், நாட்டின் மதத்தை பவுத்த மதமாக அது வலியுறுத்தியிருக்காது. ஒருவேளை அதை வலியுறுத்தி இருந்தாலும், பிற மதத்தைச் சேர்ந்தவர், அதாவது ஒரு தமிழ் கிறித்தவரோ, இந்துவோ, முஸ்லிமோ, மதமற்றவரோ அந்நாட்டின் தலைவராக வருவதற்கு தடையில்லை என்பது வெளிப்படையாக எழுதப் பட்டிருக்கும். அப்படி இல்லாத இந்த மாற்றம் என்பது ஏற்கெனவே இரண்டாந்தர குடிமக்களாக உள்ள பவுத்தர் அல்லாத தமிழ் மக்களின் நிலையை இன்னும் அழுத்தமாக உறுதி செய்வதாகவே உள்ளது.

மூன்றாவதாக நில உரிமை. இந்த முன் மொழிவு நிலங்களை மறு பங்கீடு செய்யும் போது அந்த நிலம் உள்ள கிராமத்தை, மாவட்டத்தை, மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கே முன்னுரிமைக் கொடுக்கப்படும் என்று சொல்கிறது. ஆனால் இது இராணுவம் அல்லாத காரணங்களுக்காக அரசு கையகப்படுத்தும் நிலங்களுக்கு மட்டுமே. இராணுவத்திற்காக கையகப்படுத்தப்படும் நிலங்களுக்கு எவ்வித வரையறையும் கிடையாது. இராணுவம் நினைத்தால் எந்த நிலத்தையும் கேள்வியின்றி கையகப்படுத்த முடியும். அதனை மறு பங்கீடு செய்வதை குறித்தும் இராணுவமே முடிவு செய்யும் என்று இந்த முன் மொழிவு சொல்கிறது. இன்று ஈழத்தின் பெரும் பகுதி நிலங்கள் இராணுவத்தால் ஆக்ரமிக்கப்பட்டதாகவே உள்ளன. ஒரு புறம் இராணுவம் அல்லாத சிவில் காரணங்களுக்காக கையகப்படுத்தப்படும் நிலங்களை பங்கீடு செய்வதில் நியாயமான முறை பின்பற்றப் படுவதுப் போன்ற தோற்றத்தை உருவாக்கும் இந்த முன் மொழிவு, இராணுவம் கையகப்படுத்தும் நிலங்கள் குறித்து நேர் எதிர் மறையான வரையறைகளை வகுத்திருப்பது என்பது, பின் வாசல் வழியாக தமிழரின் நிலங்களை பறிப்பதற்கான திட்டமாகவே உள்ளது.

நான்காவதாக தமிழர்களின் நீண்ட கால கோரிக்கையான வடக்கு – கிழக்கு மாகாணங்கள் இணைப்பு என்பது முற்றிலும் புறக்கணிக்கப் பட்டுள்ளது. வடக்கு – கிழக்கு இணைப்பை இனச் சிக்கலுக்கான தீர்வை நோக்கிய பயணத்தில் முன் நிபந்தனையாகவே தமிழர் தரப்பினர் பல ஆண்டுகளாக வைத்துள்ளனர். பல முறை அது குறித்து விவாதிக்கப்பட்ட போதும் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் ஒரு கூறாக அது சேர்க்கப்பட்ட போதும் சிங்களர் தரப்பு அந்த இணைப்பிற்கு எதிராகவே இருந்து வந்துள்ளனர். இருந்து வருகின்றனர். தமிழர் பகுதிகள் இணைந்திருப்பது எந்த அளவு அவசியம் என்று தமிழர் தரப்பு நினைக்கிறதோ அதே அளவு தமிழர்களை பிரித்து வைப்பதை அவசியம் என்று சிங்களர் தரப்பும் நினைக்கிறது. இந்த இரண்டு மாகாணங்களை இணைத்து விட்டு எந்த ஒரு சிங்கள அரசியல் தலைவரும் சிங்கள மக்களை எதிர்கொள்ள முடியாது. அதுவே இந்த முன்மொழிவிலும் வெளிப்பட் டுள்ளது. இந்த இணைப்பை பற்றி முடிவெடுக்காமல் எந்த ஒரு அரசியல் தீர்வும் தமிழர்களுக்கான நியாயத்தைப் பெற்றுத் தந்துவிட முடியாது.

இப்படி இந்த முன்மொழிவு முழுவதும் தமிழர்களுக்கு எதிரான, தமிழர்கள் மீதான உரிமைப் பறிப்பை சட்டப் பூர்வமாக ஆக்குவதற்கான கூறுகளைக் கொண்டதாகவே உள்ளது.

ஆக இந்த சட்ட மாற்ற முன் மொழிவு என்பது தமிழர் இழந்துள்ள உள்ள உரிமைகளை சட்ட ரீதியாக உறுதிப்படுத்தி தமிழர்களுக்கு எதிராக சட்டத்தை மேலும் இறுக்குவதாகவே உள்ளது.

'அறிவாயுதம்' நடத்திய கருத்தரங்க
துண்டறிக்கையிலிருந்து

# இந்து – ஜாதிவெறி பேராசிரியரின் துன்புறுத்தலுக்கு பலியானார் தலித் மாணவர் பிரகாஷ்



சில நாட்களுக்கு முன்னர், தனது துறைத் தலைவரின் ஜாதி, மத வெறுப்புப் பாகுபாட்டு நடவடிக்கைகளால் தற்கொலைக்குத் தள்ளப்பட்ட சென்னை கவின்கலைக் கல்லூரி மாணவர் பிரகாஷின் இல்லத்துக்கு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, எவிடென்ஸ் கதிர், வேலூர் ஆவணப்பட இயக்குநர் பாலா, குடியாத்தம் சிவா, கழகத் தோழர்கள் ஆகியோருடன் சென்று, மாணவரின் குடும்பத்தினரை சந்தித்தார்.

கல்லூரியில் துறைத் தலைவராய் இருந்த இரவிக்குமார் என்பவர், சிறந்த கலைஞனாயும், தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாய் சிறந்த மாணவருக்கான விருதினைப் பெற்றுவந்த மாணவர் பிரகாஷை, அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்பதையும், பிறப்பால் இந்துவான மாணவர் கிருத்துவ மாதா கோவிலுக்கு சென்று வழிபடுகிறார் என்பதையும் அறிந்தவுடன் தொடர்ச்சியாக கேவலமாக வகுப்பறையில் மிகவும் இழிவுபடுத்தி வந்துள்ளார். இதனைப் பலமுறை கல்லூரி முதலவரிடம் தனியேயும், மாணவர்களுடனும், பெற்றோரை உடன் அழைத்துச் சென்றும் புகார் கூறியும் கல்லூரி நிர்வாகம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கொடுமைப்படுத்துதல் தான் அதிகரித்துள்ளது. அதனால் மனமுடைந்த மாணவர் பிரகாஷ், வீடியோவிலும், கடிதத்திலும், வாட்ஸ் அப் செய்தியாகவும், கவின் கல்லூரியின் துறைத் தலைவர் இரவிக்குமாரின் இந்துமத ஜாதிவெறியின் காரணமாகவும், பேராசிரியர் சிவராஜ், கல்லூரி முதல்வர் ஆகியோரின் அலட்சியப் போக்காலுமே தான் தற்கொலை செய்து கொள்ளுவதாக மரண வாக்குமூலம் அளித்துவிட்டே இறந்திருக்கிறார். ஆனால் காவல்துறையோ, சந்தேக மரணம் என்று வழக்குப் பதிவுசெய்து குற்றவாளிகளைக் காப்பாற்றிக் கொண்டுள்ளது.

இச்செய்திகளை அவரது குடும்பத்தாரிடம் கேட்டறிந்த கழகத் தலைவர், தோழர் எவிடென்ஸ் கதிர் ஆகியோர் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தனர்.

# மேட்டூர் தோழர் சுகுமார் முடிவெய்தினார்



மேட்டூர் ஆர்.எஸ். பகுதியைச் சார்ந்த கழகத் தோழர் சுகுமார், 13.11.2017 மாலை முடிவெய்தினார். கடந்த சில ஆண்டுகளாகவே அவர் உடல்நலமின்றி இருந்தார்.

தனது இறுதி நிகழ்வை சடங்குகள் இல்லாமல் நடத்த வேண்டும் என்றும் இயக்கத்தின் சீருடையான நீல நிற ஜீன்ஸ், கருப்புச் சட்டை அணிவிக்க வேண்டும் என்றும், தோழர்களே தனது இறுதி நிகழ்வை நடத்த வேண்டும் என்றும் குடும்பத் தினரிடம் தனது இறுதி விருப்பத்தைத் தெரிவித்து இருக்கிறார். அதன்படியே அக்குடும்பத்தினரும் அவரது இறுதி நிகழ்வை நடத்தினர்.ஒரு பெரியார் தொண்டன் கம்பீரமாய் விடைபெற்றார். இயக்கமே குடும்பமாய் நின்று வீர வணக்கம் செலுத்தியது.

கழக மகளிர் அவரது உடலை இடுகாடு வரை சுமந்து வந்தனர். கழகத் தலைவர் உள்ளிட்ட ஏராள மான தோழர்கள் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

## சென்னை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் உரை

# இலங்கையை ஒற்றையாட்சியாக்கிட சர்வதேச சதி

***'அறிவாயுதம்' அமைப்பின் சார்பில் நவ.18 ஆம் தேதி தியாகராயர் நகர் சந்திரசேகர் திருமண மண்டபத்தில் "இனஅழிப்பை சட்டப்பூர்வ மாக்கும் இலங்கையின் புதிய அரசியல் யாப்பு" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. புகழூர் விசுவநாதன் தலைமை தாங்கினார். வைகோ, மணியரசன், வேல்முருகன், கவிஞர் காசி ஆனந்தன், ஆய்வாளர் திருநாவுக்கரசு, கா.அய்யநாதன், பேராசிரியர் ஜெயராமன், இராமு மணிவண்ணன், இயக்குனர் கவுதமன், தனியரசு எம்.எல்.ஏ. உள்ளிட்ட பலரும் பேசினர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:***

ஒவ்வொரு முறையும் இலங்கைப் பேரினவாத அரசு, தன் மீதான சர்வதேச அழுத்தங்கள் வரும் போதெல்லாம் உலக நாடுகளில் கவனத்தை திசை திருப்பு ஒப்பந்தங்கள், சட்டத் திருத்தங்கள் கொண்டு வருவதும், பிறகுஅவற்றைக் குப்பைக் கூடையில் வீசுவதும் வழக்கமாகிவிட்டது. இப்போது இலங்கை அரசு அதன் புதிய அரசியலமைப்பில் கொண்டு வரப்பட இருக்கும் மாற்றங்களை முன்மொழிந் திருக்கிறது. இனி எதிர்காலங்களில் ஈழத் தமிழர் தேசிய இனம் தங்களின் அடையாளம் மற்றும் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவே முடியாது முற்றாக ஒரு இனத்தை 'உரிமைப் படுகொலை' செய்யும் பிரிவுகள் இதில் அடங்கியிருக்கின்றன. இங்கே அந்த சட்டப்பிரிவுகளை பலரும் விரிவாக பேசியிருக்கிறார்கள். நான் இந்த அரசியல் சட்ட உருவாக்கத்தின் பின்னால் நிற்கும் சர்வதேச அரசியல் குறித்து சில செய்திகளை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

2009ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கை இனப்படுகொலை அரசாக சர்வதேச சமூகத்தில் பார்க்கப்பட்ட நிலையில் அதிலிருந்து உலகின் கவனத்தை திசை திருப்புவதற்கான முயற்சிகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இனப்படுகொலை அரசு நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கான வளர்ச்சித் திட்டங்களை நோக்கிப் பயணிப்பதாக உருவகப்பட்டு அதற்கான திட்டங்கள் வகுக்கப் பட்டன. உலக வங்கி, சர்வதேச நிதியம், உலக வர்த்தக நிறுவனம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் இதற்கான திட்டங்களை தயாரித்தனர். 'தொலை நோக்கு திட்டம் - 2025' என்ற பெயரில் (Vision 2025) ஒரு ஆவணம் உருவாக்கப்பட்டு, அந்த ஆவணத்தை இலங்கை அதிபர் மைத்திரி பாலசிறிசேனா, பிரதமர் இரணில் விக்ரமசிங்கே இருவரும் கடந்த செப்டம்பர் மாதம் வெளியிட்டனர். இந்த ஆவணத்தில் அடங்கியுள்ள திட்டங்களை எதிர்காலத்தில் செயல்படுத்துவதற்கேற்ப இலங்கையின் புதிய அரசியலமைப்பும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களின் அதிகாரிகளே இலங்கையின் புதிய அரசியல் சட்டப் பிரிவுகளை உருவாக்கித் தரும் வேலைகளை செய்திருக்கிறார்கள். 'தொலைநோக்கு 2025' ஆவணமும் புதிய அரசியல் சட்டமும் ஒரே நேர்கோட்டில் பயணம் செய்வதிலிருந்து இதை புரிந்து கொள்ள முடியும்.

மோடியின் இந்திய ஆட்சி, இந்த அரசியல் சட்டத்தின் உருவாக்கத்தில் தலையிடாமல் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ள சர்வதேச நிதி நிறுவனங்களின் தலையீட்டை ஏற்றுக் கொண்டு 'ராஜதந்திரம்' என்ற போர்வையில் ஒதுங்கி நிற்கிறது.

கடந்த 2013ஆம் ஆண்டு சிங்கப்பூரில் இலங்கை பிரதிநிதிகள்மற்றும் தமிழ் தேசிய விடுதலை கூட்டணியின் சம்பந்தம் குழுவினர், ஈழத்தில் மக்கள் ஆதரவே இல்லாத சில சர்வதேச தமிழர் அமைப்புகளின் கூட்டம் ஒன்று நடந்தது. 'இனப் படுகொலை' அரசின் இராஜபக்சே தலைமையை மாற்றி தேர்தல் நடத்தி, அதில் தமிழர்களின் பங்கேற்பை உறுதி செய்வதற்கான திட்டங்கள் இந்தக் கூட்டத்தில் வகுக்கப்பட்டன. தமிழ் தேசிய கூட்டணி சார்பில் சுமந்திரன், இலங்கை அரசு சார்பில் ஜெயம்பதி விக்ரமரத்னே, புலம்பெயர்ந்து வாழும் தமிழர் அமைப்பின் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர். இராஜபக்சேவுக்கு எதிராக மைத்திரி பால சிறிசேனாவை அதிபராக முன்னிறுத்தி தனிக்கட்சி நடத்திய இரணில் விக்ரமசிங்கேவுடன் உடன்பாட்டை உருவாக்கி தேர்தலை சந்திக்க திட்டம் தயாரானது. இராஜபக்சே எதிர்ப்பை முன் வைத்து தமிழர்களும் பங்கேற்று வாக்களித்தனர். இந்த சூழ்ச்சி வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதை 'தொலைநோக்கு 2025' ஆவணம் பாராட்டி 'வரலாற்றுத் திருப்புமுனை' என்று விவரிக்கிறது.




அதே ஆவணம் இலங்கை அரசு மேற்கொண்ட 'சீர்திருத்த' நடவடிக்கைகளை பட்டியலிடுகிறது.

"இலங்கை அரசின் மரியாதையை சர்வதேச அரங்கில் உயர்த்தியிருக்கிறோம். சுதந்திரமான விசாரணை ஆணையங்களை உருவாக்கியிருக் கிறோம். தகவல் அறியும் உரிமை சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். கருத்துச் சுதந்திர உரிமையை மீட்டு தந்திருக் கிறோம். அரசியல் சட்ட உருவாக்கத் திலும், மறு சீரமைப்புக்கான நடவடிக்கைகளிலும் மக்கள் கருத்தை கேட்டிருக்கிறோம். ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கிறோம். புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கிட அதற்கான குழுவை உருவாக்கியிருக்கிறோம்" என்று அரசு 'சாதனை'களை பட்டியலிடுகிறது இந்த ஆவணம்.

சர்வதேச சமூகத்தில் இலங்கைக்கு ஒரு புதிய பிம்பத்தை கட்டமைக்க தமிழர்களின் இனப்படு கொலைகளை முற்றாக மறைக்கும் முயற்சிகளுக்கு ஆதரவாக தமிழ் தேசிய கூட்டணியின் சம்பந்தம் பிரிவைச் சார்ந்த சுமந்திரன், ஒரு பிரதிநிதியாகச் செயல்பட்டு வருகிறார்.

அய்.நா.வில் நடக்கும் விவாதங்களிலும் ஈழத் தமிழர் இனப்படுகொலையை திசை திருப்புவதற்கான திட்டமிட்ட சதி அரங்கேறி வருகிறது. அமெரிக்க-அய்ரோப்பிய நாடுகளின் 'ஏஜெண்டுகள்' இந்த திசை திருப்பும் முயற்சிகளில் முழு வீச்சில் இறங்கி யிருக்கிறார்கள். 'இனப்படுகொலை' குறித்த விவாதங்கள் நடக்கவில்லை. 'நீதிக்கான மாற்றம்' என்ற பெயரில் ஈழத் தமிழர் பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன. 'போர்க் குற்றம்' என்று வரும்போது இலங்கை அரசு மட்டுமின்றி விடுதலைப் புலிகள் தரப்பிலும் குற்றங்கள் இழைக்கப்பட் டுள்ளதாகவே விவாதிக்கப்படுகின்றன.

அமெரிக்காவின் முழுமையான பின்புலத்தோடு நடக்கும் சூழ்ச்சி வலையில் தமிழர்களின் தேசிய சுயநிர்ணய உரிமை முற்றாக மறுக்கப்பட்டு 'அய்க்கிய ராஜ்யம்' என்ற பெயரில் இலங்கையின் ஒற்றை ஆட்சியை உறுதிப்படுத்தும் அரசியல் சட்டத்துக்கு தமிழர்கள் வாக்குகளையும் பெறுவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. 'சமூகப் பொருளாதார சந்தை' (Social Market Economy) என்ற பொருளாதாரத் திட்டத்தை முன்னிறுத்தும் தொலைநோக்கு ஆவணத்தில் 'ஒற்றை இலங்கை'யில் பன்னாட்டு நிறுவனங்களின் வணிக சுரண்டலுக்கு திட்டமிடப்படுகிறது. அரசு தனியார் கூட்டு நிறுவனங்களை உருவாக்கும் முயற்சிகளை ஏற்கனவே இலங்கை அரசு தொடங்கிவிட்டது.

இந்திய அரசு தந்த அழுத்தத்தால் இலங்கையில் 13ஆவது சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது. மாகாண கவுன்சிலுக்கான தேர்தல்கள் நடத்தப் பட்டன. 13ஆவது சட்டத் திருத்தம் மாகாண கவுன்சிலுக்கு வழங்கிய உரிமைகளும் பறிக்கப்பட்டு வருவதை வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேசுவரன் சுட்டிக் காட்டி வருகிறார். மக்கள் வாக்கெடுத்து தேர்ந்தெடுத்த மாகாண அரசுகள் செயல்படாமல் முடங்கிக் கிடப்பதை தட்டிக் கேட்க இந்திய அரசு தயாராக இல்லை. 13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் வழியாக தமிழர்களுக்கு உரிமைகள் மீட்டுத் தரப்பட்டுள்ளன என்று இந்தியாவின் காங்கிரஸ் ஆட்சியாளர்களும் வெளியுறவுத் துறை பார்ப்பன அதிகாரிகளும் பொய்யாக பெருமை அடித்துக் கொண்டார்கள். இப்போது அந்த சொற்ப உரிமைகளும் பறிக்கப் பட்டு, புதிய அரசியல் சட்டம் அறிமுகப்படுத்தப் படும்போது, இந்திய ஆட்சி மவுனம் சாதிக்கிறது. ஆட்சிகள் மாறினாலும் பார்ப்பன அதிகாரவர்க்கம், ஈழத் தமிழர்களின் உரிமைகளை ஒடுக்கும் கொள்கையை மட்டும் அப்படியே மாறாமல் பின்பற்றிக் கொண் டிருக்கின்றன.

2002ஆம் ஆண்டு நார்வே தலையிட்டது. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கு மிடையே போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது. நார்வே பிரதிநிதி எரிக்சோல்ஹிம் - இரு தரப்பினரிடையேயும் பேசி உருவாக்கிய 'ஒஸ்லோ பிரகடனம்' ஈழத் தமிழர்களுக்கு முழுமையான தன்னாட்சி உரிமையை வலியுறுத்தவில்லை. ஆனாலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட் டிலுள்ள பகுதிகளை தமிழர் பகுதிகளாக அங்கீகரித்து அங்கே இலங்கை இராணுவம் நுழைவதை தடைப்படுத்தியது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், சர்வதேச சூழ்ச்சி வலையில் சிக்கிடாமல் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் தீர்வுத் திட்டம் ஒன்றை சர்வதேச சட்ட வல்லுநர்களைக் கொணடு தயாரித்து, பிரதமர் இரணில் விக்ரமசிங்கேயிடம் அளித்தது. அப்போது அதிபராக இருந்த சந்திரா குமாரதுங்கா, இத் திட்டத்தை சீர்குலைத்தார். இப்போது அரசியல் தீர்வுக்கு தமிழர்கள் சார்பில் முன் வைக்கக்கூடிய சரியான அரசியல் தீர்வுத் திட்டம். விடுதலைப் புலிகள் தயாரித்த திட்டமாகவே இருக்க வேண்டும். அதை முன்னிறுத்த வேண்டும்.

வடக்கு மாகாண முதல்வர் விக்னேசுவரன், தமிழ் தேசிய கூட்டணியிலிருந்து விலகி நின்று தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான குரலை அவரது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒலித்து வருகிறார். ஈழத்தில் நடந்தது இனப் படுகொலைதான் என்றும் போர்க் குற்றத்துக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்றும் வடக்கு மாகாண சபை தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மாகாண அரசின் இத்தீர்மானத்தை புறக்கணித்துவிட முடியாது.

இலங்கைக்கான அரசியல் சட்டத்தை உருவாக்கும் பணிகளில் இந்தியா விலகி நின்று அமெரிக்க அய்ரோப்பிய நாடுகளில் சதிக்கு உடந்தையாக இருப்பதால் பிரச்சினையை மீண்டும் இந்தியாவின் பக்கம் திருப்பும் முயற்சிகளில் விக்னேசுவரன் ஈடுபட்டதையும் சுட்டிக்காட்ட வேண்டும். 2015 நவம்பரில் பிரதமர் மோடி பங்கேற்ற நிகழ்ச்சியில் பேசிய வடக்கு மாகாண முதல்வர் ஈழத் தமிழர் பிரச்சினைகளுக்கான தீர்வு திட்டங்களை இலங்கை அரசு பிரதிநிதிகள், வடக்கு-கிழக்கு மாகாண முதல்வர்களை கலந்து ஆலோசித்து உருவாக்க இந்தியா முயற்சிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார். சர்வதேச நிதி நிறுவனம் (அய்.எம்.எப்.) பின்னாலிருந்து இயக்கும் சதியை புரிந்த விக்னேசுவரன், யாழ்ப்பாணத்தில் அன்னிய முதலீடுகளைக் குவிக்கும் அய்.எம்.எப். அமைப்பை தயாரித்த புதிய திட்டத்தை இரணில் விக்ரமசிங்கே பரிந்துரைத்தபோது அதற்கு உடன்பட மறுத்து, தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து விக்னேசுவரனை முதல்வர் பதவியி லிருந்து நீக்க முயற்சிகள் நடந்தன. யாழ்ப்பாண மக்களின் ஆதரவு பலத்தால் அது முறியடிக்கப் பட்டது.

பிரச்சினையை அமெரிக்க அய்ரோப்பிய பிடியிலிருந்து இந்தியாவுக்கு திருப்பி ஏற்கனவே இந்திய ஆட்சி தந்த வாக்குறுதிகளின் அடிப்படையில் இந்தியாவுக்கு அழுத்தம் தர வடக்கு மாகாண முதல்வர் கருதிய நிலையில் தமிழ் தேசிய கூட்டணியின் பிரதிநிதியான சுமந்திரன், யாழ்ப்பாணத்தில் 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி 11ஆம் தேதி நடந்த ஒரு கூட்டத்தில் இந்தியா தலையிட்டு இலங்கைக்கு அழுத்தம் தருவதை தமிழ் தேசிய கூட்டணி விரும்பவில்லை என்று அறிவித்து, அமெரிக்க அய்ரோப்பிய 'ஏஜென்சிகளின்' ஒற்றை இலங்கையை உருவாக்கும் திட்டத்துக்கே மறைமுக ஆதரவினை வெளிப்படுத்தினார்.

சர்வதேச நிதி நிறுவனங்களால் அதன் சந்தைப் பொருளாதார இலாபத்துக்கேற்ப ஈழத் தமிழர்களின் அடையாளம் அழிக்கப்பட்டு, 'அய்க்கிய ராஜ்யம்' உருவாக்கும் முயற்சிகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் பொது வாக்கெடுப்பு என்ற கோரிக்கையை நாம் வலியுறுத்துவதைத் தவிர வேறு

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ராஜீவ் வழக்கில் சி.பி.அய். விசாரணையில் ‘ஓட்டைகள்’

(முதல் பக்கத் தொடர்ச்சி)

என்பதற்காகவே நீதிமன்றம் மிகக் கடுமையாக தண்டித்திருக்கிறதோ என்று பல முறை நானே சிந்தித்ததுண்டு.

ஒருவேளை இதுவே இப்படித்தான் செல்வாக்குள்ள தலைவர் தொடர்பில்லாத வழக்காக இருந்திருக்கு மானால், தீர்ப்பு இருந்திருக்குமா? என்ற கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை” என்று செய்தியாளரிடம் நீதிபதி கூறினார்.

“இவர்கள் ராஜீவ் கொலையாளிகளாகவே கருதப் படுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனாலும்கூட என்னைத் தவறாக கருதிடவேண்டாம்; நான் இந்த சூழ்நிலையில் சோனியா அவர்களிடம் கருணை காட்ட வேண்டுகிறேன். இதை எனது கடுமையான கருத்தாக கருதி விடாதீர்கள்” என்று கடிதத்தில் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

உங்களிடமிருக்கும் மதிப்பைப் போலவே பண்டிட் ஜவகர்லால் நேருவிடமும் எங்களுக்கு மதிப்பு உண்டு. பண்டிட் நேரு இறந்த அடுத்த 5 மாதங்களில் 1964இல் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கோபால் கோட்சே 14 ஆண்டுகளிலேயே விடுதலை செய்யப்பட்டார் என்பதை சுட்டிக் காட்டுகிறேன்.

பேரறிவாளன் வழக்கில் அவரது வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே அவருக்கு தண்டனை வழங்கப்பட்டது. வழமையாக சாட்சிகள் சட்டப்படி ஒருவரது வாக்குமூலத்தை மட்டுமே அடிப்படையாக ஏற்றுக் கொள்வதில்லை. அந்த வாக்குமூலத்தை நிரூபிப்பதற்கான சாட்சியங்களும் வேண்டும்.

இந்த வழக்கில் வாக்குமூலத்தை மட்டுமே ஏற்றுக் கொண்டு தண்டிக்க முடியுமா என்ற கோணத்தில் வழக்கு நடந்தபோது நாங்கள் தீவிரமாக விவாதித் தோம். தடா சட்டம் அப்படிக் கூறுவதை இந்த வழக்கில் ஏற்பது சரியாக இருக்காது என்று நான் கூறினேன். ஏனைய இரண்டு நீதிபதிகளையும் எனது இல்லத்துக்கு அழைத்து பலமுறை விவாதித்தேன். அவர்கள் இருவரும் தடா சட்டப்படி ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். எனவே மெஜாரிட்டி நீதிபதிகளின் கருத்தை நான் ஏற்க வேண்டியவன் ஆனேன்.

வழக்கு விசாரணையின்போது சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணையில் கடும் ஓட்டைகள் இருப்பதை அறிந்தேன். விசாரணையின்போதே கடுமையாகக் கேட்டேன். குறிப்பாக குற்றம்சாட்டப்பட்டவர்களிட மிருந்து ரூ.40 இலட்சம் இந்தியப் பணம் பறிமுதல் செய்ததாக சி.பி.அய். கூறியபோது நான் அரசு வழக்கறிஞர் அல்டாஃப் அகமதுவிடம் கேட்டேன்: “சிறீலங்கா கரன்சியை கைப்பற்றியதாக நீங்கள் கூறியதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால்



நீதிபதி கே.டி. தாமஸ்

இந்தியப் பணம் ரூ.40 இலட்சத்தைக் கைப்பற்றியதாகக் கூறுகிறீர்கள். அக்காலகட்டத்தில் இது மிகப் பெரிய தொகை. அவ்வளவு பெரிய தொகை இவர்களுக்கு யாரிடமிருந்து வந்தது என்பதை ஆராய்ந்தீர்களா? இவர்களுக்குப் பின்னால் சக்தி வாய்ந்த பெரும் புள்ளிகள் இருந்திருக்க வேண்டுமே அதை ஏன் ஆராயவில்லை? என்று கேட்டேன். புலனாய்வுக் குழு தலைவர் டி.ஆர். கார்த்திகேயனிடம் கலந்து பேசித் தான் பதில் கூற முடியும்; அதற்கு அவகாசம் தேவை என்றார். ஆனால் அடுத்த நாளே அரசு வழக்கறிஞர் புலனாய்வுப் பிரிவினரால் பணம் எங்கிருந்து வந்தது என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறிவிட்டார்.

நான் இந்த பதிலில் அதிர்ச்சியானேன். புலன் விசாரணையின் இந்த ஓட்டைகளை சக நீதிபதிகளிடம் பகிர்ந்து கொண்டேன். அவர்கள் தீர்ப்பில் புலனாய்வு அமைப்பை நாம் குறை கூறக் கூடாது. அவர்கள் இந்த வழக்கில் கடுமையாக உழைத்திருக்கிறார்கள் என்றனர். சி.பி.அய்.யை தீர்ப்பில் விமர்சிக்க வேண்டாம் என்று மூன்று நீதிபதிகளும் ஒரு முடிவுக்கு வந்தோம். தீர்ப்பை தனித்தனியாக எழுதி பிறகு தீர்ப்புகளை பரிமாறிக் கொண்டோம். ஒவ்வொருவரும் எழுதிய தனித்தனி தீர்ப்புகளை படித்தோம். தலைமை நீதிபதி என்ற முறையில் நான் தீர்ப்பை முதலில் வாசித்தேன். அடுத்து வாசித்த நீதிபதி வாத்வாவின் தீர்ப்பில் சி.பி.அய். அதிகாரி கார்த்திகேயனை மனம் திறந்து பாராட்டும் வாசகங்கள் இடம் பெற்றிருந்ததை கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். “சி.பி.அய். விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் பாராட்டு” என்பதே பத்திரிகைகளின் தலைப்பு செய்தியாகியது. அமர்வில் நான் மூத்த நீதிபதி. நீதிபதி வாத்வா தீர்ப்பில் செய்த கடைசி நேர மாற்றங்களை என்னிடம் தெரிவித்திருந்தால் நான் என்னுடைய தீர்ப்பில் சி.பி.அய். குறித்த எனது குறைகளை பதிவு செய்திருக்க முடியும்” என்றார் நீதிபதி கே.டி. தாமஸ்

கல்கத்தாவில் உள்ள நீதிபதி வாத்வாவிடம் ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ செய்தியாளர் தொடர்பு கொண்டு இது குறித்து கேட்டபோது, அவர் கருத்து தெரிவிக்க மறுத்து விட்டார்.

தொடர்ந்து நீதிபதி கே.டி.தாமஸ் கூறுகையில்: “தீர்ப்புக்குப் பிறகு வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட 19 பேரில் ஒருவர் ‘தி வீக்’ வார ஏட்டுக்கு அளித்த பேட்டி ஒன்றைப் பார்த்தேன். அதில், “எங்களுக்கு அந்த ரூ.40 இலட்சம் இந்தியப் பணத்தைத் தந்தவர் சந்திராசாமி என்று விசாரணை அதிகாரிகளிடம் கூறினோம். அந்த அதிகாரி, ‘சந்திரசாமி ஒரு கடவுள்; அவரைப் பற்றி எதுவும் கூறக் கூடாது’ என்று எங்களை எச்சரித்தார் என்று கூறியிருந்தார். அப்போதுதான் சந்திராசாமியை விசாரிக்காமல் புலனாய்வில் பெரும் தவறு நடந்திருக்கிறது என்பதை உணர்ந்தேன்” - என்று நீதிபதி கே.டி. தாமஸ் கூறினார்.

ராஜீவ் கொலை வழக்கை விசாரித்து தீர்ப்பு எழுதிய தலைமை நீதிபதியின் இந்தக் கடிதமும் ‘இண்டியன் எக்ஸ்பிரஸ்’ ஏட்டுக்கு அளித்த பேட்டியும் பெரும் அதிர்வலைகளை உருவாக்கியிருக்கிறது.

# கோகுல்–பிரேமா இணையேற்பு விழா



*12-11-2017 அன்று காலை 11-00 மணிக்கு, சேலம், சிவதாபுரம் மாணிக்கம் திருமண மண்டபத்தில், தோழர் கோகுலக் கண்ணனுக்கும், கழகப் பொறுப்பாளர் ஏற்காடு பெருமாளின் அக்கா மகள் பிரேமாவுக்கும், ஜாதி, தாலி, சடங்கு மறுப்பு இணையேற்பு விழாவை முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் வீரபாண்டி ஆ. இராசா தலைமையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்திவைத்தார். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக் கணக்கில் கழகத் தோழர்கள் அரங்கு நிரம்பி வழியும் வண்ணம் திரளாகத் திரண் டிருந்தனர். விழா நிறைவில் அனைவருக்கும் அசைவ உணவு வழங்கப்பட்டது. இளம்பிள்ளை கழகத் தோழர்கள் மணவிழாப் பரிசாக ஒரு மோட்டார் சைக்கிளை வழங்கினர். கழக ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கு மணமகன் கோகுலக்கண்ணன் ரூ.10,000/- நன்கொடை வழங்கினார்.*

*(3ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*வழி இருப்பதாகத் தெரியவில்லை. ஸ்பெயின் நாட்டிலிருந்து கேட்டலோனியா மாநில மக்கள் தங்களுக்கு தாங்களே வாக்கெடுப்பு நடத்தி பிரிந்து போகும் முடிவை அறிவித்துள்ளார்கள். ஸ்பெயின் நாடாளுமன்றம் இந்த வாக்கெடுப்பை ஏற்க மறுத்திருக்கிறது. இத்தாலியில், ஏற்கனவே தனி நாடாக இருந்த லம்பார்டி* (Lombardy), *வென்டோ* (Vento) *என்ற இரு மாநிலங்கள் தங்களுக்கு தாங்களே வாக்கெடுப்பு நடத்தி ஸ்பெயினிலிருந்து பிரிந்து போவதாக அறிவித்துள்ளன.*

*ஈராக் நாட்டின் வடக்குப் பகுதியான குர்து பகுதியில் கடந்த செப்டம்பர் 25ஆம் தேதி குர்து தேசிய இனமக்கள் தங்களுக்கு தாங்களே வாக்கெடுப்பு நடத்தினர். ஈராக்கிலிருந்து குர்தீஸ்தான் பகுதி பிரிந்து போவதற்கு பெரும்பான்மை மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஈராக், ஈரான், துருக்கி நாடுகள் இதை எதிர்க்கின்றன. ஈரான், துருக்கியிலும் குர்து இன மக்கள் வாழ்கிறார்கள். அமெரிக்காவும் எதிர்க்கிறது. இஸ்ரேல் ஆதரிக்கிறது. வரலாற்றில் முதல்முறையாக சுதந்திர குர்தீஸ்தான் நாடு உருவாகும் முயற்சி தொடங்கிவிட்டதில் அம்மக்கள் மகிழ்ச்சியில் மூழ்கியுள்ளனர். ஆக அய்ரோப்பிய ஒன்றியத்தில் இணைந்த நாடுகளிலும் மேற்காசிய நாடுகளிலும் தன்னாட்சிக்காக வாக்கெடுப்புகள் நடக்கும் அரசியல் சூழலில் தமிழீழ பிரச்சினையில் பொது வாக்கெடுப்பு கோரிக்கை நடைமுறைக்கு எதிரானது என்று புறக்கணித்துவிட முடியாது என்பதற்காக இதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.*

*ஆனாலும், ஈழத் தமிழர்களின் தனித் தாயக கோரிக்கை மாகாண கவுன்சிலாக சுருங்கி அதுவும் அழிக்கப்படுகிறதே என்று குரல் கொடுக்கும் நாம், நமது தமிழ்நாடு ஈழத்து மாகாண கவுன்சில்களைவிட மோசமான நிலையிலிருப்பதை நினைக்கும்போது நமக்கு ஈழத் தமிழர் உரிமைக்கு குரல் கொடுக்கும் தார்மீக உரிமை இருக்கிறதா என்ற குற்ற உணர்வே மேலிடுகிறது.*

*தமிழ்நாடு தேர்வாணையம் தமிழ்நாட்டு வேலை வாய்ப்புக்கான அறிவிப்பில் தமிழ் தெரியாதவர்கள் விண்ணப்பிக்கலாம். இந்தியா முழுதுமிருந்தும் விண்ணப்பிக்கலாம். நேபாளம், பூட்டான் நாட்டைச் சார்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்திருக்கிறதே நாம் என்ன செய்ய போகிறோம்? நாம் இறையாண்மையுள்ள ஒரு மாநிலத்தில்தான் வாழ்கிறோமா? - என்று விடுதலை இராசேந்திரன் கேட்டார்.*

## நன்கொடை

*தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி, ‘நிமிர்வோம்’ இதழுக்கு ரூ.2000மும், ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கு ரூ.1000மும் நன்கொடை வழங்கினர். பெண்ணாகரம் பரமசிவம் ரூ.500/- ‘நிமிர்வோம்’ இதழுக்கு வழங்கினார்.*

**பாரூக் வழக்கு நிதி :** *சேலம் கிழக்கு மாவட்டத்தில் நடந்த தோழர்கள் சந்திப்பின் போது ஏற்காடு பெருமாள் பிரபாகரன், பாரூக் குடும்ப நிதியாக 10,000/-வழங்கினார்கள்.*

*(நன்றியுடன் பெற்றுக் கொண் டோம்-ஆர்)*

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896
periyarmuzhakkam@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 23rd November 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN